[1975 மார்ச் 8

கூட ஆலோசனை கேட்டார்கள், அதைப்பற்றி அவர்களிடத்தில் இடம் வேண்டுமென்றால் பரிசீலித்து தருவதாக பேச்சளவில் ஒத்துக்கொண்டேன். அதுபற்றித் திட்டவட்டமான பரிசீலனை வந்த பிறகு முடிவு செய்யலாம்.

வலையர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்

*249 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள வலையர் வகுப்பினை அரிசன மக்கள் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : இல்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

கோணப்பராயன்குளம் கிராமத்தில் சாலை வசதி

*250 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், கோணப்பராயன்குளம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுடுகாட்டுப்பாதை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : தலைவரவர்களே, குளித்தலை வட்டம் ரெங்கநாதபுரத்தில் சிற்றூரான கோணப்பராயன்குளம் கிராமத்தில் குடியிருக்கும் அரிசன மக்களுக்கு சுடு காட்டுக்கு செல்ல பாதை அமைப்பதற்காக 7 சென்ட் நிலத்தை ஆர்சிதம் செய்வதற்கான பிரிவு 6 விளம்பல் வரைவு அரசினால்

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.